**மாவனெல்லை பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 10 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 10 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 மே 31 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களினாலான தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்களில் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மாவனெல்லை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு ஏற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு முடிவில் 04 வேலைகளுக்குக் கடன் கொடுத்தோரின் கீழ் ரூபா 46,392 அதிகமாக நிதியேற்பாடு செய்யப்பட்டமையால், மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 46,392 குறைத்தும் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் கொடுத்தோருக்கான நிதியேற்பாடு அதேயளவு அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட 46 - 8326 இலக்கமுடையதும் ரூபா 90,100 பெறுமதியுடையதுமான டிறெய்லர் நிலையான சொத்தின் கீழ் கணக்கிலிடப்படாமையால் நிலையான சொத்துக்கள் அதேயளவு குறைத்தும் மூலதனப் பயன்பாட்டிற்கான வருவாயின் பங்களிப்புக் கணக்கு குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(இ) 2014, 2015 ஆம் ஆண்டுகளில் நூலகப் புத்தகங்களைக் கொள்வனவு செய்கையில் பெறப்பட்ட மொத்தத் தரகு ரூபா 103,157 ஆகும். இது மீளாய்வாண்டினது செலவின மற்றும் வருவாய்க் கட்டுப்பாட்டுக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டும் செலவு வைக்கப்பட்டுமிருந்தது.

(ஈ) சிறுவர் பூங்காப் பொதுக் கழிவறையின் 2014 எப்ரல் மாதத்திற்குரிய நீர்க் கட்டண நிலுவையாகிய ரூபா 256,069 தொடர்பாகக் கடன் கொடுத்தோரின் கீழ் நிதியேற்பாடு செய்யப்படவில்லை.

#### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு முடிவிலான ஊழியர் கடன் கணக்கு மீதி ரூபா 9,540,221 ஆகும். உபபதிவேடுகள் / அறிக்கைகளின் பிரகாரம் மீதி ரூபா 9,457,115 ஆகும். இதனால் ரூபா 83,106 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

(அ) மீளாய்வாண்டு முடிவிலான பெற வேண்டிய கணக்கு மீதிகள் ரூபா 63,572,934 ஆகும். அதில் ரூபா 10,847,237 ஓராண்டிற்கு மேற்பட்ட பழமை வாய்ந்தனவாகும்.

(ஆ) மீளாய்வாண்டு முடிவிலான கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு மீதிகள் ரூபா 51,296,801 ஆகும். அதில் ரூபா 15,885,000 ஓராண்டிற்கு மேற்பட்ட பழமை வாய்ந்தனவாகும்.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 30,295,596 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 23,521,628 ஆகும் இதனால் மீளாய்வாண்டின் நிதிப் பெறுபேறுகளில் ரூபா 6,773,968 அதிகரிப்பு தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

நிதிப் பெறுபேறுகளின் ரூபா 6,773,968 அதிகரிப்பிற்கு 05 வருவாய் விடய அதிகரிப்பும் 04 செலவின விடயக் குறைவும் பிரதான காரணிகளாகின.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 வருவாய்ச் சேகரிப்பிலான செயலாற்றல்

செயலாளரால் மிளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருவாயினது தோற்றுவாய் | 2015 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை | 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையில் அறவீடு | 2015 ஆம் ஆண்டிற்கான பட்டியல் தொகை | ஆண்டிற்கான பட்டியலில் அறவீடு | 2015 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | ஆண்டிற்கான பட்டியலிடப்பட்ட தொகையில் நிலுவை | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2015.12.31 இல் உள்ளவாறான நிலுவை | | | |
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 15,286 | 7,156 | 11,757 | 6,009 | 8,130 | 5,748 | 13,878 |
| (ii) | குத்தகை வாடகை | 1,874 | 146 | 15,910 | 15,895 | 1,728 | 15 | 1,743 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 177 | 51 | 1,400 | 1,400 | 126 | - | 126 |
| (iv) | ஏனைய வருவாய் | 33,278 | 27,255 | 82,810 | 42,662 | 6,023 | 40,148 | 46,171 |

மேற்படி வருவாய்த் தகவல்களை நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கணக்கிணக்கஞ் செய்தபோது பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| வருவாயினது தோற்றுவாய் | வருவாய் நிலுவைத் தகவல்களின் பிரகாரம் மீதி | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| தீர்வையும் வரியும் | 13,878 | 13,715 | 163 |
| ஏனைய வருவாய் | 46,171 | 48,428 | 2,257 |

### 2.3.2 குத்தகை வாடகை

2002 முதல் 2013 வரையான காலப்பகுதிக்குரிய 18 இறைச்சிக்கடைகளதும் 03 மீன் கடைகளினதும் வாடகை நிலுவையாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 1,081,031 அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.3 விளம்பரப் பலகைக் கட்டணம்

விளம்பரப் பலகைப் பதிவேட்டின் பிரகாரம் 34 நிரந்தர விளம்பரப் பலகைகளுக்கு மாத்திரமே கட்டணம் அறவிடப்பட்டிருந்தன. அதற்குப் புறம்பாக, கொழும்பு - கண்டி வீதியில் கடுகன்னாவ வரை மாத்திரம் விசாலமான அளவுடைய 52 நிரந்தர விளம்பரப் பலகைகள் இருப்பது 2015 நவெம்பர் 3 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது. எனினும், அது சம்பந்தமாக அளவை மேற்கொள்ளப்பட்டு கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.4 அனுமதிப் பத்திரக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1988 பிரதேச சபை (நிதியும் நிர்வாகமும்) விதிக் கோவையினது 59 மற்றும் 61 ஆம் இலக்க விதிகளின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டு ஆரம்பத்திலும் வர்த்தக அனுமதிப் பத்திரம், வேலை வரி மற்றும் தொழில்கள் சம்பந்தமாகக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டு பதிவேடு தயாரிக்கப்படுவதுடன் அப் பதிவேட்டின் பிரகாரம் வரி அறவிடப்படவும் வேண்டும். எனினும், வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களுக்குரிய வேலைகள், வர்த்தகம், வியாபாரத் தொழில் மாத்திரம் வரிப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் 464 வியாபார அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தபோதும், வருடாந்தக் கணிப்பின்போது இனங்காணப்பட்ட எண்ணிக்கை 381 ஆகும்.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 1,416,500 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 28,263,245 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சட்டபூர்வமாகக் கையேற்காது வீதியை அகலமாக்குவதற்கு முயன்றபோது பாதுகாப்பு அரணும் கேட்டும் மதகும் உடைந்து 2.62 பர்ச்சஸ் அளவிலான நிலப் பரப்பு வீதியில் சரிந்ததாகத் தீர்மானித்த நீதிமன்றம் அது தொடர்பாக முறைப்பாட்டாளருக்கு ஏற்பட்ட இழப்புக்கு ஈடாக ரூபா 425,120 இழப்பீடு வழங்குமாறும் ரூபா 23,250 வழக்குச் செலவாக வழங்குமாறும் பிரதேச சபைக்குக் கட்டளை பிறப்பித்திருந்தது. இந்நிகழ்வுக்குப் பொறுப்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து இக்கட்டணம் அறவிடப்பட வேண்டுமென சபரகமுவ உள்ளூராட்சி ஆணையாளரது 2014 ஜுலை 30 ஆந் திகதிய CLG/7/3/5/5 ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் சபைக்கு அறிவிக்கப்பட்டபோதும், அத் தீர்மானம் செயற்படுத்தப்படவில்லை.

(ஆ) 2013 சனவரி 07 முதல் 2015 ஒக்டோபர் 21 வரை இனங்காணப்பட்ட அத்துமீறிய நிர்மாண வேலைகளது எண்ணிக்கை 65 ஆகும். அத்துமீறிய நிர்மாண வேலைகள் சம்பந்தமான நேரடிப் பரிசோதனையை மேற்கொண்டு குறித்த அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் தொடர்பு மேற்கொள்ளப்பட்டபோதும், 20 சந்தர்ப்பங்களில் பரிசோதனை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபரகமுவ மாகாண சபையால் பிரதேச சபையின் திட்டமிடல் பெண் உத்தியோகத்தர் ஒருவர் 2003 மார்ச் தொடக்கமும் வருவாயக் கட்டுப்பாட்டாளர் மே மாதம் தொடக்கமும் இடமாற்றம் செய்யப்பட்டபோதும், அவர்கள் சேவையிலிருந்து விடுவிக்கப்படாது இருந்தமையால் அவ்விருவரது சம்பளமும் மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது என மாகாண சபை அறிவித்திருந்தது. அதற்கமைய, 2003 ஆம் ஆண்டின்போது அவ்விரு உத்தியோகத்தர்களுக்கும் சம்பளமாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 152,140 கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பமாகிய 2016 மார்ச் 28 வரை மீளளிப்புக்குள்ளாகாதிருந்தது.

(ஆ) சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட 22 ஊழியர்களுக்கு விதவைகள், அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பான ரூபா 47,187 வழங்கப்பட வேண்டுமாயினும், ரூபா 18,560 மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) ஓய்வூதியத்துடன் கூடிய நிரந்தர சேவையில் உள்ள 17 ஊழியர்களுக்கு 2014 ஒக்டோபர் 24 முதல் 2015 சனவரி 31 வரையான காலப்பகுதிக்கு ஊழியர் சேமலாப நிதயத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் கொடுப்பனவு செய்யப்பட்ட சபையின் பங்களிப்பான ரூபா 226,690 மீள அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

(அ) 2014 டிசெம்பர் 02 ஆந் திகதியன்று மஹவத்த வாகனச் சேவை நிலைய நிர்மாண வேலைக்குப் பொருட்களையும் சேவைகளையும் பெறுவதற்கென ரூபா 164,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2015 நவெம்பர் 09 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனையின்போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2014 நவெம்பர் 20 ஆந் திகதி வேலை முடிவுற்றபோதும், வாகனங்களைக் கழுவுவதற்கு அது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) வாகனங்களைக் கழுவுவதற்குத் தேவையான உபகரணங்கள் எதுவும் பொருத்தப்பட்டிராததுடன், கழுவுதலை மேற்கொள்ளும் இடத்தில் பராமரிப்பின்றி புதர்கள் மண்டியிருந்தன.

(iii) வாகனங்களைக் கழுவும் இடத்தில் வெளியாகும் அசுத்த நீரைத் தேக்கி வைப்பதற்குத் தாங்கி அல்லது வேறேதாவது சுற்றாடல் பாதுகாப்பு விதிமுறைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அசுத்த நீர், குடிநீர் பெறப்படும் மூல இடமான மா ஓயாவில் கலப்பதற்கு வழிவகுக்கப்பட்டிருந்தமையால் சுற்றாடல் மற்றும் சுகாதாரச் சிக்கல்கள் உருவாகும் அபாயம் நிலவியது.

(ஆ) மாவனெல்லை சிறுவர் பூங்காவின் அருகே பக்கச் சுவரை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் சபையால் நேரடியாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. வேலை விடயம் இலக்கம் 03 இன் கீழ் பக்கச் சுவரை நிர்மாணிப்பதற்கு ரூபா 56,960 சீமெந்துக்கும் ரூபா 29,045 மணலுக்கும் ரூபா 19,734 கருங்கற்களுக்கும் மொத்தமாக ரூபா 108,739 அதிகமாகச் செலவிடப்பட்டிருந்தது.

## 3.4 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையின் கழிவு முகாமைத்துவ நிலைய வளவில் கலீ பவுசர் மூலம் கொண்டு வரப்படும் மலப் பொருட்களை அகற்றுகையில் நெடுங்காலமாகப் பயன்படுத்தப்பட்டவாறிருக்கும் பாதுகாப்பற்ற குழி நிறைந்து வழியும் நிலையில் இருந்ததுடன் சிறிய மழையின்போதும் அது நிறைந்து முகாமைத்துவ நிலைய வளவின் அருகே மா ஓயாவில் கலப்பதற்கான அபாயம் நிலவியது. இக் கழிவுப் பொருட்கள் கழிவு முகாமைத்துவ நிலையக் காணியில் நிறைந்து வழிவதன் மூலம் அங்கு நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் ஆவதற்கும் சுற்றாடலில் கலப்பதால் வேலை புரியும் ஊழியர்களது சுகாதாரத்திற்கு பங்கம் ஏற்படவும் காரணமாக இருந்தது. சபையிடம் இரு கலீபவுசர்கள் இருந்தபோதும், தனியார் நிறுவனங்களும் நபர்களும் கலீ சேவையை 2015 ஆம் ஆண்டின்போது வழங்கியிருந்தனர்.

(ஆ) உரத்தை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பொப் கெட் இயந்திரம் ஓராண்டிற்கு மேலாகப் பயன்படுத்தப்படாது கழிவு முகாமைத்துவ நிலைய வளவில் வெறுமனே இருந்தது.

(இ) உர உற்பத்திக்குத் தேவைப்படும் நீரானது அக் காணியில் பெறப்படாததால் முறைப்படி உரம் உற்பத்தி செய்யப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 3.5 சுற்றாடல் பிரச்சினைகள்

கழிவு முகாமைத்துவ நிலையத்தில் நாளாந்தம் 20 தொன் கழிவுப் பொருட்கள் கிடைக்கப்பெற்றபோதும், உர உற்பத்திக்குப் பெறப்படும் கழிவுப் பொருட்கள் ஏறக்குறைய 07 தொன்களே என்றும் எஞ்சியவை எரியூட்டப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டதுடன், பொலித்தீன் அதிகளவில் உள்ளதால் அது சுற்றாடலுக்குப் பங்கம் விளைவிக்கலாம் எனவும் 2016 மார்ச் 25 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப் பொறுப்புப் நல்லாளுகையும்

### 4.1 வரவு, செலவுத் திட்டம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டினது வரவு, செலவுத் திட்டத்தில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்ட 22 செலவின விடயங்களது கூட்டுத் தொகையான ரூபா 203,549,000 நிதியேற்பாடு 100 சதவீதமும் 06 செலவின விடயங்களது ரூபா 777,182 கூட்டுத் தொகையான நிதியேற்பாட்டில் 55 முதல் 95 சதவீதத்திற்கு இடைப்பட்டதாகவும் சபை நடவடிக்கைகளுக்கு மொத்தமாக ரூபா 204,326,182 பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஆ) வருமான விடயங்கள் 06 க்குரிய மதிப்பிடப்பட்ட வருவாய் ரூபா 3,825,000 ஆகும். உள்ளவாறான வருவாய் ரூபா 2,296,196 ஆகும். வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட வருவாய்க்கு ஒப்பாக அதனது வருவாய்த் தலைப்புகளில் வருவாய் அறவிடப்படுவது 33 முதல் 69 சதவீத வரையில் அமைந்திருந்தது.

(இ) செலவின விடயங்கள் 14 இன் ரூபா 7,128,000 நிதியேற்பாட்டில் ஒவ்வொன்றும் ரூபா 5,412,000 வீதம் செலவின விடயங்களுக்கு மாற்றுஞ் செய்யப்பட்டதையடுத்து ரூபா 1,716,000 சேமிப்புக்குள்ளாகியிருந்தது.

(ஈ) செலவின விடயங்கள் 04 இன் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 910,000 நிதியானது ஆண்டின்போது வேறு செலவின விடயங்களுக்கு மாற்றுஞ் செய்யப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(i) கணக்கீடு
(ii) வரவு, செலவுத் திட்டம்
(iii) வருவாய் நிர்வாகம்
(iv) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்